வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

05.10.2020 திங்கட்கிழமை

## கடலில் குளித்த 3 இளைஞர்கள் சாவு!

கொழும்பு, ஒக். 05

நீர்கொழும்பில் கடலில் குளிக்கச் சென்று, காணாமல் போயிருந்த மூன்று இளைஞர்கள் சடலங்களாக நேற்று மீட் கப்பட்டனர் என்று கொச்சிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரி வித்தார்.

நீர்கொழும்பு - கம்பல்தொட கடற் பகுதியில் கடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மூவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயி னர்.

இதையடுத்து நடத்தப்பட்ட தேடலில் நேற்று முன்தினம் அவர்கள் மீட்கப்பட வில்லை. இந்நிலையில், நேற்று அவர்களின் சடலங்கள் கடற்படை யின் சுழியோடிகளால் மீட்கப்பட்

11

# மீண்டும் கொரோனா

# கம்பஹாவில் இருவருக்கு சமூகத்தொற்றாக பரவல்

## ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்!!

கொழும்பு, ஒக்ரோபர் 05

நாட்டில் கொரோனா தொற்று மீண்டும் சமூகத் தொற்றாக மாறியுள்ளது. நேற்றைய தினம் கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டியில் பெண் ஒருவருக்கும், அவரின் மகளுக்கும் கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது.

11



## 3,402 கொரோனா தொற்றாளர்

கொழும்பு, ஒக். 05

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய நால்வருக்கும் கம் பஹா மாவட்டத்தில் தாய்க் கும் மகளுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால், நாட்டில் கொரோனா தொற்றாளர் களின் எண்ணிக்கை 3,402 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து நேற்றையதினம் நால்வர் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற் றுக்குள்ளாகி பூரண குணமடைந்தவர்களின்

11

## புங்குடுதீவில் 20 பேர் சுய தனிமைப்பட்டனர்!

யாழ்ப்பாணம், ஒக். 05

கம்பஹாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இரு பெண்களால் புங்குடுதீவில் 20 பேர் சுயதனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.

புங்குடுதீவு 12ஆம் வட் டாரம் பகுதியில் வசிக்கும் பெண்கள் இருவர் மினுவாங் கொடையில் இருந்து கடந்த வாரம் ஒருவரும் நேற்றுமுன் தினம் ஒருவரும் புங்குடுதீ வில் உள்ள தமது வீடுகளுக் குத் திரும்பியிருந்தனர்.

அவர்கள் இருவரும் பணி யாற்றும் ஆடைத்தொழிற் சாலையில் பணியாற்றும் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அந் தத் தொழிற்சாலை யில் பணியாற்றும்

11

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த எழுவர் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 05

கம்பஹா - மினுவங்க கொடை ஆடைத் தொழிற் சாலையில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 7 பெண்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை யில் பணியாற்றும் பெண் ஒருவருக்குக் கொரோனா தொற்று நேற்று இனங் காணப்பட்டது. இதை யடுத்து, அங்கு பணியாற்றும் 400 பேர் சுயதனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட்டுள் ளனர்.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏழு பேரும் அடங்கு வர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## இன்று தொடக்கம் பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஒக்.05

நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று முதல் இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்பட்டுள் ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலை களுக்கும் எதிர்வரும் வெள்ளிக் கிழமை விடுமுறை வழங்கப் படுவதாக இருந்தது. ஆனால், நேற்றைய தினம் கம்பஹா கொரோனா தொற்று இனங் காணப்பட்டதையடுத்தே அனைத்துப் பாடசாலைகளும் இரண்டாந் தவணை விடுமுறைக் காக மூடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

## குடியரசு அரசியல் யாப்பின் மூலம் முடியாட்சியை ஏற்படுத்த திட்டம்

### 20ஐ இப்படி சாடுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 05

“இருபதாம் திருத்தச் சட் டம் குடியரசு அரசியல் யாப்பு என்ற பெயரில் முடியாட்சியை ஏற்படுத்தும் திருத்தமே இது.” இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த “இருபதாவது திருத்தமும் அரசியல் விளைவுகளும்” என்ற ஆய்வரங்கில் பங்கேற்று “இருபதாவது அரசமைப்புத் திருத்தமும் அரசியல் விளைவு களும் என்ற தலைப்பில் சட்ட உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரை யில் மேலும் கூறியதா வது:-

11

## கழகக் கொடியில் புலி! தடா போட்டது பொலிஸ்




வடமராட்சி, ஒக். 05

புலிச் சின்னம் பொறித்த கொடியை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஏற்றுவதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை லீக்கின் அனுசரணையில் வல்வை பிறிமியர் லீக் உதை பந்தாட்டப் போட்டியை

11

## இலங்கைத் தமிழரின் பாதுகாப்பே இந்தியாவின் பாதுகாப்பும் பலமும்

### இனப் பிரச்னைக்கு கூட்டு சமஷ்டியே ஒரே தீர்வு



யாழ்ப்பாணம், ஒக். 05

“இலங்கைத் தமிழ் மக்கள் எந்தள வுக்கு அதிகாரத்தைப் பெற்றுப் பாதுகாப்பாகவும் பலமாகவும் இருக்கிறார்களோ, அந்தளவுக்கு இந்தியாவுக்கும் பாதுகாப்பும் பலமும் கிட்டும். பதின்மூன்றா வது திருத்தம் மூலம் பல உண்மைகளை இந்தியா புரிந்து கொண்டுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு - கிழக்கில் கூட்டுற வான சமஷ்டியை இலங்கை பிரச்னைக்கு ஒரே தீர்வு.”

- இவ்வாறு இந்தியாவுக்கு தெரிவித் துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன்.

நியூ இந்தியன் பௌண்டேசன் அமைப் பின் ஏற்பாட்டில் நடந்த காணொலி மூலமான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

“பதின்மூன்றாவது திருத்தச்சட்

11

## றிஷாத் பதியுதீனுடன் அரசியல் ஒப்பந்தத்தில் ஈடுபடவில்லை

### கர்தினாலுக்கு ஜனாதிபதி பதில்

கொழும்பு, ஒக். 05

“பாராளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீனுடன் எங்கள் அரசாங்கம் எந்த அரசியல் ஒப்பந்தத்திலும் ஈடுபட வில்லை. இதை நான் உறுதி படத் தெரிவிக்கிறேன் என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

றிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாத் பதியு தீனின் விடுதலை

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இலங்கைத்...

டத்தின் இன்றைய நிலையும் இந்தியாவின் பங்கும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரகத்தின் முன்னாள் தூதுவர் நடராஜன், இந்தியாவின் ஆளும் பா.ஜ.கட்சியின் தமிழ்நாட்டு கிளையின் துணைத் தூதுவர் வானதி சீனிவாசன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் சிறப்புரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

"கொடிய போரின் பின்னர் எமது மக்களின் துன்ப துயரங்களை நீக்கும் வகையில் செயல்படக்கூடிய ஓர் இடைக்கால ஏற்பாடாகக்கூட மாகாண சபை எமது மக்களுக்கு பயன்படவில்லை என்பதும் பயன்படப்போவதில்லை என்பதுமே கசப்பான உண்மையாகும். எனது காலத்தில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்கள், நில அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் போன்ற கட்டமைப்பு மேலும், கலாசார ரீதியான இனப்படுகொலை செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் எதனையும் நாம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் கொண்டிருக்கவில்லை. சில நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருந்ததென்றால் மக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்புக் குரலே அதற்குக் காரணமாக அமைந்தது.

"ஆகவே, இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் இத்தனை குறைபாடுகளுடன் பதின்மூன்றாவது திருத்த சட்டம் ஏற்படுத்தப்பட்டமை இந்தியாவுக்கு தோல்வி இல்லையா என்பது சாதாரணமாக எழக்கூடிய ஒரு கேள்வி தான்.

அதற்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு சிலரால் தவறாக வழிநடத்தப்பட்டமையும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன ராஜீவ் காந்தியை தனது சாணக்கியத்தினால் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திருப்புவதில் வெற்றி கண்டமையும் முக்கிய காரணங்களாவன.

"மாகாண சபைகளை முற்றாக ஒழித்து விட்டால் தமிழர் வாழும் பிரதேசங்கள் அனைத்தும் சிங்கள ஆதிக்கத்திற்குள் சென்று விடும். அதன்பின், பறங்கியருக்கு இந்த நாட்டில் ஏற்பட்ட நிலைதான் ஏற்படும். இதனை நாங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை அதற்கு பதிலான ஒரு நல்ல சட்டம் வரும்வரை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும்.

"பதின்மூன்றாம் திருத்தம் வெளியில் இருந்து பார்த்தால் நல்ல அதிகாரப் பகிர்வு உள்ள விடயமாகத் தெரியும். ஆனால், அதனை நன்றாகப் படித்துப் பார்த்தால் அது கானல்நீராகத்தான் தெரியும். ஒட்டு மொத்தத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கத்திற்கும் இடையே உள்ள அதிகார பகிர்வு பற்றிய பிரிவுகள் தெளிவாக நிர்ணயம் செய்யப்படவில்லை.

"என்னைப் பொறுத்தவரையில், பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் பல உண்மைகளை இந்தியா புரிந்துகொண்டுள்ளது என்று நினைக்கிறேன். ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை ஏற்படுத்துவதே இலங்கை இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வாகும் என்பது மோடி தலைமையிலான அரசுக்குப் புரியாத ஒரு விடயம் அல்ல.

"மோடி தமது முதற் சந்திப்பிலேயே இலங்கைப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கைக்கு ஒரு கூட்டுறவு சமஷ்டியே சிறந்தது என்று கூறியிருந்தார். ஆகவே, எந்தளவுக்கு இந்தியாவின் தென் கோடியில் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் அதிகாரத்தை பெற்று பாதுகாப்பாகவும் பலமாகவும் இருக்கின்றார்களோ அந்தளவுக்கு இந்தியாவுக்கும் அது பாதுகாப்பாக அமையும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

இதன் அடிப்படையிலான ஓர் அணுகுமுறையை மிகவும் துணிச்சலான முறையில் இந்தியா இனிவரும் காலங்களில் மேற்கொள்ளவேண்டும். கடந்த ஒரு வருடகாலமாக இந்தியாவின் உள்ளீடல் அவசியம் என்பதை நான் வலியுறுத்தி வந்துள்ளேன். இந்தியாவின் கவனம் எங்கள் பக்கம் திரும்பியுள்ளதை யிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவானது வரலாற்றுக் காலம் தொடக்கம் ஒரு எதிரி நாடாக பார்க்கப்படுகிறது. ஆனால் மறு புறத்தில் இன மத மொழி ரீதியில் இலங்கை தமிழ் மக்கள் இந்தியாவை நேசிக்கின்றார்கள். ஆனால் அதனைசீர் தூக்கி பார்த்து இலங்கை தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு இந்தியா தவறியுள்ளது.

ஆகவே இந்திய இலங்கை உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு இந்தியா நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இறுதித் தீர்வான சமஷ்டி முறையை எட்டும் வரை, போரை முடிவுக்கு கொண்டுவர உதவிகளைப் பெறும்போது இலங்கை அரசு வழங்கிய "பதின்மூன்றிற்கும் மேலாகவும்" என்ற வாக்குறுதிகளை செயற்படுத்த அது முன்வரவேண்டும். அதற்கான தேவையும் அவசியமும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

"தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதன் அடிப்படையில், அவர்கள் ஒரு தரப்பாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தியாவை கையாள்வதில் முன்னர்போல இலங்கை அரசாங்கம் பல ஏமாற்று வித்தைகளை மேற்கொள்ளும். அதற்கமைவாக இந்திய மக்களும் மத்திய, மாநில அரசுகளும் செயற்பட வேண்டும்" - என்றார். (ஐ)

## 3,402 கொரோனா...

எண்ணிக்கை 3 ஆயிரத்து 258 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் 129 பேர் தொடர்ந்தும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாத் தொற்று சந் தேகத்தில் 42 பேர் தொடர்ந் தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## கழகக் கொடியில்...

நடத்துகிறது.

இந்தப் போட்டி நேற்று ஆரம்பமானபோது, புலிச் சின்னம் பொறித்த கொடியேற்றப்பட்டது. ஆனால், அதை ஏற்ற விடாமல் பொலிஸார் தடுத்து நிறுத்தியுடன் அந்தக் கொடிக்கும் தடை விதித்துள்ளனர். (ஐ)

## புங்குடுதீவில்...

400 பேர் அடையாளப்படுத்தப்பட்டனர். இந்நிலையில் இந்தப் பெண்கள் இருவரும் ஊர் திரும்பிய நிலையில் அவர்களும் நேற்று சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிப் பழகியவர்களும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை அவர்கள், இருவரும் பயணித்த பஸ்களை அடையாளம் காணும் பணிகளும் தொடர்கின்றது.

இதனிடையே ஊர் திரும்பிய பெண்களின் வீட்டுச் சூழலில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் பிரசன்னமாகியுள்ளதுடன் தீவிர விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில் அந்தப் பகுதி அபாய பகுதியாக அறிவிக்கப்படக்கூடும் என்றும், மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# பட்டப்பகலில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.05

பட்டப்பகலில் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் 10 பவுண் நகையை களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்தவேளையிலேயே வீட்டுக்குள் புகுந்தவர்கள் நகையை திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இதில் 10 பவுண் நகைகள் திருட்டுப் போனதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ- எ)

# மடாதிபதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.05

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மதுபோதையில் நடத்திய தாக்குதலில் ஆலய மடாதிபதி உட்பட இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று வல்லிபுர ஆழ்வாரின் ஆஞ்சநேய மடையின்போது மதுபோதையில், வந்த இளைஞர் குழுவினர் ஆடிப்பாடி குழப்பம் விளைவித்தனர்.

ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் மடாதிபதி ஆனந்தன் சுவாமி மற்றும் இன்னொருவரும் தலையிட்டு, அந்த இளைஞர்களை வெளியேற்றினர்.

இதனால், ஆத்திரமடைந்த அந்த இளைஞர்கள் ஆலயத்தின் வெளிப் பகுதியில் காத்திருந்து, மடாதிபதியும் மற்றவரும் வெளியே வந்தபோது தாக்குதல் நடத்தினர். இதில் இருவரும் காயமடைந்தனர். (எ)

## கடலில் குளித்த...

டது.

தலவாக்கலை - ஸ்டேலின் தோட்டத்தைச் சேர்ந்த 22 வயது முத்துக்குமார் சிந்துஜன், 23 வயது மனோகரன் சசிகுமார் மற்றும் பதுளை - நமுனுகள பகுதியைச் சேர்ந்த 20 வயது புகனேந்தர் பிரதீபன் ஆகிய இளைஞர்களே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இளைஞர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக, நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலங்கள், குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ -எ)

## குடியரசு...

இருபதாம் திருத்தச் சட்டம் குடியரசு அரசியல் யாப்பு என்ற பெயரில் முடியாட்சியை ஏற்படுத்தும் திருத்தமே இது. இருபதாம் திருத்தம் வருவதற்கு முன்னரே முடியரசன் போய்ச் சொல்கிறார் நான் வாயால் சொல்வதெல்லாம் சுற்று நிரூபம் என்று நினைத்துக் கொள்ளுங்கள் என்கிறார்.

முன்னர் 18 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டபோது ஆட்சியில் இருந்தவர் அரசியல்வாதி. அவர் அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டி ருந்தாலும், ஓர் அரசியல்வாதிக்கு சில விளக்கங்கள் உண்டு. சில விடயங்களை எப்படி செய்யலாம், செய்ய முடியாது என்ற நிதானம் அனுபவத்திலாவது வந்திருக்கும். இன்று நிலைமை அப்படியல்ல.

19 அகற்றுவோம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வாக்குறுதி அளித்தார். பத்தொன்பதாம் திருத்தத்தை அகற்றுவோம் என்பதற்கும் நிறைவேற்றதிகாரத்தை வலுவாக்குவோம் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. நாட்டவர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்கும் மனநிலையில் உள்ளனர்.

இந்த எதிர்ப்பை நாம் வலுவாகத் தெரிவிக்க வேண்டும். நாட்டின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்காக வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## மீண்டும்...

இதையடுத்து, அந்தப் பெண் வசித்த, பணியாற்றிய திவுலப்பிட்டி, மினுவாங்கொட பிரதேசங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு பணியாற்றிய 400 இற்கும் மேற்பட்டவர்கள் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அந்தப் பெண்ணுடன் பஸ்ஸில் பயணித்த 40 பேர், அந்தப் பெண் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட கம்பஹா மருத்துவமனையில் 15 பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திவுலப்பிட்டியில் மேலதிகமாக 200 பேரும், மினுவாங்கொடையில் 250 பேரும் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கம்பஹாவில் இருந்து யாழ்ப்பாணம் - புங்குடுதீவுக்கு வந்த ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களால் 20 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் வடமராட்சியில் நேற்றுமுன்தினம் 81 மீனவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகினர். 9 பேர் தனிமைப்படுத்தல் முகாம்களிலும் தனிமைப்படுத்தலுக்கு உட்டுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## ரிஷாத்...

தொடர்பில் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, "அவரின் விடுதலையின் பின்னணியில் இரகசிய அரசியல் ஒப்பந்தம் இருக்கலாம்", என்று சந்தேகம் வெளியிட்டார். அத்துடன் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையும் அவர் கேள்விக்கு உட்படுத்தியிருந்தார்.

இதையடுத்தே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுடன் எங்கள் அரசாங்கம் எந்த அரசியல் ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை என்பதை நான் உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நமது நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது எனது அரசாங்கத்தின் முதல் மற்றும் முக்கிய பொறுப்பாகும். கடந்த காலங்களில் நடந்ததைப்போல, மக்களை கைது செய்யும் அல்லது விடுவிக்கும் அதிகாரத்தை அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்க நான் தயாராக இல்லை. அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது திணைக்களங்கள் விடும் குறைபாடுகள் அல்லது தவறுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன்.

"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுடன் எங்கள் அரசாங்கம் எந்த அரசியல் ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை என்பதை நான் உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன். என் மீது நம் நாட்டு மக்கள் இதுவரை வைத்திருந்த நம்பிக்கையை வீணாகாமல் என்றும், அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்த நான் தொடர்ந்து பணியாற்றுவேன் எனவும் மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.", என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

வார இதழ்
ஈழநாடு
Eelanadu
05.10.2020 திங்கட்கிழமை
சார்வரி, புரட்டாதி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 492 7805**

# அழிவின் விளிம்பில்...!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் உலகம் அணு ஆயுத அழிவின் விளிம்பில் இருப்பதாக எச்சரித்திருக்கின்றார். அணு ஆயுதத்தை முற்றிலும் ஒழிப்பதற்கான தினத்தை முன்னிட்டு, ஐ.நாவில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி மீது அணு குண்டுத் தாக்குதல் இடம்பெற்று 75 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த 75 ஆண்டுகளில் அணு ஆயுதப் பரவலை தடுப்பது தொடர்பில் பல்வேறு உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இன்று, முன்னரைவிடவும் உலகம் மேலும் அணு ஆயுதங்களால் சூழப்பட்டிருக்கின்றது.

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளான அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையில் முன்னர் எப்பபோதுமில்லாதளவிற்கு பகைமையுணர்வும் முரண்பாடுகளும் அதிகரித்திருக்கின்றன. தென்சீனக் கடல் பகுதியில் சீனா அமைத்துவரும் இராணுவத் தீவு மற்றும் சீனாவின் ஒரு பாதைத் திட்டம் தொடர்பில் கடுமையான அதிருப்தியில் இருக்கும் அமெரிக்கா, அண்மைக்காலமாக சீனாவிற்கு எதிரான நடவடிக்கைகளை தீவீரப்படுத்தியிருக்கின்றது. சீனாவின் பல முன்னணி கட்டுமான நிறுவனங்கள் மீது தடை விதித்திருக்கின்றது. இதனை எதிர்கொள்ளும் வகையில் சீனாவும் பல எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதேபோன்று, ரஷ்யாவின் இராணுவ நவீனப்படுத்தல் திட்டங்களை அமெரிக்கா ஒரு முக்கிய சவாலாகக் கருதுகின்றது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் காரணமாக நாடுகளுக்கிடையில் இராணுவ ரீதியான பதற்ற நிலையொன்று காணப்படுகின்றது.

இதேபோன்று, இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லை முரண்பாடுகள் அவ்வப்போது தீவிரமடைகின்றன. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எப்போதுமே ஒரு பதற்றமான உறவு இருந்து கொண்டே இருக்கின்றது. இவ்வாறு பகைமையுணர்வுடன் கூடிய இராணுவ முறுகலுக்குள் இருக்கும் நாடுகள் அனைத்துமே அணு ஆயுத பலமுள்ள நாடுகளாகும்.

இதேபோன்று வடகொரியா உலகின் சட்ட ஒழுங்கு எதற்குள்ளும் அகப்படாது, அணு ஆயுத உற்பத்தியில் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதேபோன்று அணு ஆயுத பலத்துடன் இருக்கும் பிறிதொரு நாடு இஸ்ரேல். இந்த நாடுகளுக்கிடையில் இடம்பெறும் இராணுவ பதற்றங்கள் பிறிதொரு புறமாக அணு ஆயுதத்தின் கோரப் பல்லை உலகிற்கு காண்பித்துக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை, பலம்பொருந்திய நாடுகள் மத்தியில் காணப்படும் பகைமையும் இராணுவ பதட்டங்களும் இந்த மோதலுடன் எவ்வித தொடர்புமில்லாத நாடுகளையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. சிறிய நாடுகளை கடன்பொறிக்குள் சிக்க வைத்துக் காரியம் சாதிக்கும் சீன நகர்வுகள், பல சிறிய நாடுகளையும் இந்த அதிகார மோதலுக்குள் சிக்க வைத்திருக்கின்றன. இதில் இலங்கையும் ஒன்று. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் சீனாவிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகம், சீனாவின் இராணுவத்தை இலங்கைக்குள் நிலைநிறுத்துவதற்கான ஒரு நீண்ட கால திட்டம் என்றே பல மேற்கத்தைய, இந்திய இராணுவ நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர். இதனை இலங்கை ஆட்சியாளர்கள் மறுத்த போதிலும், யுத்தம் ஒன்று மூளுமாக இருந்தால் எதுவும் நிகழலலாம். அவ்வாறான சூழலில் சிறிய நாடுகளின் அரசாங்கங்களால் சக்திவாய்ந்த நாடுகளைக் கட்டுப்படுத்த முடியாது. சீனா தனது காலை இலங்கைக்குள் ஊன்றுவதை அச்சுறுத்தலாக நோக்கும் இந்தியா, இலங்கையின் மீதான தனது பிடியை மேலும் இறுக்கிக் கொள்வதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துகின்றது.

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதிகார சக்திகளின் மோதல்களுக்குள் தாங்கள் வரவில்லை என்று கூறிக்கொண்டாலும் கூட, ஓர் எல்லைக்கு மேல் அதனைத் தவிர்க்க முடியாதென்பதே இன்றைய உலக அரசியல் யதார்த்தம். பலம்பொருந்திய நாடுகளுக்கிடையில் யுத்தம் மூளுமாக இருந்தால், உலகம் அழிவின் விளிம்பிற்கு செல்வது நிச்சயம்.

**இன்று ‘மகாத்மா’ காந்தியின் 151ஆவது பிறந்ததினம்:**



# பாழடையும் நிலையில் பல கோடிகள் செலவில் உருவான நெடுங்கேணி பேருந்து நிலையம்!

2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்திற்கு பின்னராக அமைக்கப்பட்ட நெடுங்கேணி பேருந்து நிலையம் அழிவடைந்து செல்லும் நிலையில் உள்ளது.

சில கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் போக்குவரத்து வசதிகளும், தங்குமிட வசதிகளும், 15இற்கு மேற்பட்ட கடைத் தொகுதிகளும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் அமைத்த காலத்தில் கடைத் தொகுதிகளை போட்டி போட்டு வியாபாரிகள் எடுத்தனர். ஆனால், கடைகளை எடுத்து நடத்தியவர்களும் கடைகளை மூடியுள்ளனர். கடைகளை ஒழுங்காக திறந்து நடத்திய வரலாறே இல்லை என வியாபாரிகள் கவலையோடு தெரிவித்து வருகின்றனர்.

பேருந்து நிலையத்தில் உள்ள ஏனைய கடைகளை நடத்துவதற்கு யாரும் முன்வருவது கிடையாது. அவ்வாறு எடுத்து நடத்தாமல் இருப்பதற்கான காரணமாக இருப்பது பேருந்துகள் வந்து செல்லாமை. போதியளவு மக்களின் பயன்பாடு இல்லை. இப்படியாக இருக்கும் இவ் பேருந்து நிலையம் அதிகார பூர்வமாக திறந்து வைக்கப்பட்டதா? அப்படியாக தெரியவில்லை. இ.போ.ச. பேருந்துகளோ, தனியார் பேருந்துகளோ தற்போது உள் வராத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து நிலையம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களிலும் சரி ஏனைய அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்களிலும் சரி கதைக்கப்படுகின்றதே தவிர, அதற்குரிய செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுவதாக தெரியவில்லை.

**மத்திய பேருந்து நிலையத்தை மையப்படுத்தி பொதுச்சந் தையும் அதன் அருகில் அமைக்கப்பட் டுள்ளது. விவசாய பிரதேச மான வவுனியாவில் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்து வதற்கு இலகு தன்மை கருதி இது அமைக்கப்பட்ட தாகும்.**

மத்திய பேருந்து நிலையத்தை மையப் படுத்தி பொதுச்சந்தையும் அதன் அருகில் அமைக்கப் பட்டுள்ளது. விவசாய பிரதேச மான வவுனியாவில் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு இலகு தன்மை கருதி இது அமைக்கப்பட்டதாகும்.

எனவே, அரச, தனியார் பேருந்துகள் நெடுங்கேணி மத்திய பேருந்து நிலையத்திற்குள் வந்து தரித்து செல்வதற்கும், இந்தப் பேருந்து நிலையத்தினை நடத்தி செல்வதற்கும் உரிய அதிகாரிகள் ஆவன செய்து தருமாறு அப் பகுதி மக்கள், வியாபாரிகள் கேட்டு நிற்கின்றனர்.

இவ்வாறாக, பல இலட்சம் ரூபாவை செலவு செய்து கட்டப்படும் பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் இருப்பதாக தெரியவில்லை. இதேபோல் வவுனியா பேருந்து நிலையம் உத்தியோக பூர்வமாக திறக்கப்பட்டும் பல்வேறு குறைபாடுகளை கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

# வடக்கு – கிழக்கு மாகாணத்தில் 87 உட்கட்டுமானத் திட்டங்கள்!

## ஒரே நேரத்தில் முன்னெடுக்கவும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.05

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பிரதேச அபிவிருத்தி உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் 72 உள்ளூராட்சி சபைகளிலும் வெளிநாட்டு நிதியுதவியுடன் 87 அபிவிருத்தி திட்டங்கள் ஒரே நேரத்தில் முன்னெடுகப் படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் களின் நேரடி கண்காணிப்பில் இந்தத் திட்டம் ஆகக் கூடியது 90 நாட்களில் நடைமுறைப்படுத் தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவருத்தி வங்கி, ஐரோப்பிய யூனியன், இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பங்களிப் பில் இந்தத் திட்டம் முதற்கட்ட மாக முன்னெடுக்கப்படும்.

நாடு தழுவிய ரீதியில் விலை மனுக் கோரப்பட்டமையால், வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளிலும் இன்னும் மூன்று வாரங்களில் உட்கட்டுமான வேலைத்திட் டங்கள் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளது என்று தேசிய திட்ட பிரதேச உதவியளிக்கும் திட் டத்தின் திட்டப்பரிவு அறிவித்துள்ளது.

இத்திட்டதை முன்னெடுப் பதற்காக தேசிய திட்டப் பிரிவு ஏற்கனவே உட்கட்டுமான அபி விருத்தி திட்டத்திற்கான நிதி யின் ஒரு பகுதியை அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கியுள்ளது.

மக்கள் பங்கேற்பு முன்னுரி மைத் திட்டத்தின் பிரகாரம் 2019 இல் மக்களினால் முன்னு ரிமையில் தேர்ந்தெடுக்கபட்ட கருத்திட்டமே தற்போது உட் கட்டுமான திட்டங்களாக முன் னெடுக்கபடுகிறதாக தேசிய திட்டப்பிரிவு கருத்துத் தெரி வித்துள்ளது.

எனினும், இந்தத் திட்டத் திற்கு 30 இலட்சம் ரூபா முதல் ஒரு கோடி ரூபா வரையான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இது மிகக் குறை வானது என்றும் தவிசாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# அடுத்து எந்த தேர்தல் நடந்தாலும் ஐ.தே.க., சஜித் சேர்ந்தே போட்டி

## விஜயகலா மகேஸ்வரன் உறுதி




கொழும்பு, ஒக். 05

**மாகாண சபைக்கோ, பிரதேச சபைக்கோ அடுத்து தேர் தல் நடந்தால், ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் தலைமை யிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்தே போட்டியிடும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர், அரசியல் பழி வாங்கல் தொடர்பில் விசாரிக்கும் ஜனா திபதி ஆணைக்குழு முன்பாக முன்னிலையானார். சாட்சியமளித்த பின்னர், ஊட கங்களின் கேள்விகளுக்குப் பதில ளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நேற்றைய தினம் சாட்சியப் பதிவு எதுவும் இடம்பெறாத நிலையில் அங்கிருந்து வெளியே றிய அவர் பத்திரிகையாளர் களின் கேள்விகளுக்குப் பதில ளித்தார்.

'நான் யாரையும் அரசியல் ரீதியாக பழி வாங்கவில்லை. அது தொடர்பில் நான் யாரோடும் கதைக்கவும் இல்லை. எனது சாட்சியத்தை பதிவு செய்யும் போது முழுமையான உண்மை களை நான் ஆணைக் குழுவுக்கு வெளிப்படுத்துவேன்.' என்றார்.

அரசியல் தொடர்பில் அவரி டம் எழுப்பப்பட்ட கேள்விக ளுக்குப் பதிலளித்த அவர்:-

'எதிர்வரும் நாட்களில் பிர தேச சபைத் தேர்தலோ அல் லது மாகாண சபை தேர்தலோ முதலில் நடத்தப்படலாம். அப் படி நடத்தப்படும் தேர்தலில் ஐ.தே.க.வும் சஜித் பிரேமதாஸ தரப்பும் ஒன்றினைந்தே போட் டியிடும். அதற்கான நடவடிக் கைகள் இடம்பெறுகின்றன.

ஐ. தே.க. வுக்கு புதிய பிர தித் தலைவராக ருவான் விஜய வர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் அவர் சஜித் பிரே மதாஸ தரப்புடன் பேச்சுக்களை நடத்துகின்றார். கண்டிப்பாக அடுத்துவரும் தேர்தலில் நாங் கள் இணைந்தே போட்டியிடு வோம்.' என்று கூறினார். (ஐ)

# ஆசிரியர்தின விழாவும் 'கலாதீபம்' மின் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக். 05

கோப்பாய் ஆசிரிய கலா சாலையின் உலக ஆசிரியர் நாள் விழாவும், கலாதீபம் மின்சஞ் சிகை வெளியீட்டு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கலாசாலையின் ஜெகன்மோகினி மண்டபத்தில் அதிபர் வீ. கருணலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலாசாலை யின் ஓய்வுநிலை விரிவுரையா ளர் வி. எஸ். குணசீலன், மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமை அலுவலகப் பிரதி முகாமையா ளர் கலாவாணி குணசீலன் ஆகியோர் பிரதம விருந்தினர்க ளாகக் கலந்து கொள்வர்.

கலாசாலையின் 'கலாதீபம்' என்ற மாத மின்சஞ்சிகையின் (e - magazine) முதல் வெளி யீடும் இன்று இடம்பெற வுள்ளது.

யுனிசெவ் அமைப்பின் வழி காட்டலின் பிரகாரம் இவ்வாண்டு ஆசிரியர் தினம், நெருக்கடிச் சூழலில் தலைமை தாங்குபவ ராகவும் எதிர்காலத்தை மீளக் கட்டமைப்பவராகவும் ஆசிரி யர், என்ற தொனிப்பொருளில் உலகெங்கும் முன்னெடுக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.(ஐ)

# உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, ஒக். 05

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட் சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகின என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சை நாடு முழுவதும் 2,648 நிலையங்களில் இடம் பெறவுள்ளது.

2 இலட்சத்து 77 ஆயிரத்து580 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 85,244 தனிப்பட்ட பரீட்சார்த்திக ளும் பரீட்சைக்குத் தோற்றவுள் ளமை குறிப்பிடதக்கது.




# இருபதாவது திருத்தம் ஆய்வரங்கு: யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், ஒக். 05

இருபதாவது அரசமைப்புத் திருத்தமும் அரசியல் விளைவுக ளும் என்ற தலைப்பிலான ஆய்வரங்கு நேற்று யாழ்ப்பா ணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந் நிகழ்வு, வட மாகாண அவைத்தலைவர் சி. வீ. கே. சிவ ஞானம் தலைமையில் இடம் பெற்றது.

இந்த ஆய்வரங்கில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலை வர் மாவை சோ.சேனாதிராசா தொடக்க, உரையை ஆற்றினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறையின் முதுநிலை விரி வுரையாளர், சட்டத்தரணி திருமதி கோசலை மதன் "20ஆவது திருத்தம்" என்ற தலைப்பில் சிறப்புரையை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், "20ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் அரசியல் விளைவுகளும்" என்ற தலைப்பில் சட்ட உரையை ஆற்றினார். (ஐ)

# சமூக அக்கறையை வலியுறுத்தி கிளிநொச்சியில் நடைபயணம்!

கிளிநொச்சி, ஒக். 05

உடல் ஆரோக்கியத்திற்கான சமூக விழிப்புணர்வு நேற்று ஞாயிற் றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி இந்துக் கல்லூரி தொடக்கம் கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை 9.2 கிலோ மீற்றர் தூரம் இந்த விழிப்புணர்வு நடை பயணம் இடம்பெற்றுள்ளது.



கிளிநொச்சி மாவட்ட சமூக அபிவிருத்தி பேரவையின் ஏற் பாட்டில் நேற்றுக் காலை 6.45 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பமான விழிப்புணர்வு நடையானது 8.30 மணிக்கு கிளிநொச்சி மத் திய கல்லூரியில் நிறைவுபெற்றது.

சமூகத்தில் காணப்படும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு, வீதி விபத்துக்களை தடுத்தல், சுத்த மான சூழலை பேணுதல் போன்ற சமூக விழிப்புணர்வை ஏற் படுத்தும் நோக்கில் இவ் விழிப் புணர்வு நடை இடம்பெற்றது. முக்கியமாக, மாணவர்கள், இளம் தலைமுறையினர் உள் ளிட்ட சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் மேற்படி விட யங்கள் தொடர்பில் விழிப் புணர்வை ஏற்படுத்தி ஆரோக் கிய சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நடையானது அடுத்த வாரம் கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் ஆரம்பித்து வட்டக்கச்சி மத்திய கல்லூரி வரை இடம்பெறவுள்ளது.

இன்றைய இவ் விழிப்பு ணர்வு நடையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், யாழ். பல்லைகழக கிளிநொச்சி வளா கங்களின் தொழிநுட்பப் பீடாதி பதி திருமதி சிவமதி, விவசாய பீட பீடாதிபதி சூரியகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரும் கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் இணைப்பாள ருமான மருத்துவர். த.சத்திய மூர்த்தி மற்றும் மருத்துவர்கள் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்த னர். (ஐ)

# இயக்கச்சியில் கைதான விவசாயிகள் பன்னிருவரும் பிணையில் விடுவிப்பு!

கிளிநொச்சி, ஒக். 05

அத்துமீறி விவசாயம் செய்த னர் என்ற குற்றச்சாட்டில் இயக் கச்சியில் கைது செய்யப்பட்ட விவசாயிகள் 12 பேரும் நேற்று கிளிநொச்சி நீதிவானால் பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

இயக்கச்சிக் கோயில் வயல் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிர தேச செயலர் வழங்கிய ஆவ ணங்களுடன் நெல் விதைப்பில் ஈடுபட்டிருந்த 12 விவசாயிக ளைச் சுண்டிக்குளம் வனவளத் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லைக்குள் அத்துமீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் பிடித்துச் சென்றனர். திணைக்கள அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்ட அவர் கள் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டு கைது செய்யப் பட்டனர்.

இந்நிலையில், 12 விவசா யிகளும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத் தப்பட்டனர். இவர்களின் சார்பில் சட்டத்தரணி விஸ்வ லிங்கம் மணிவண்ணன் முன்னி லையாகி வாதிட்டார்.

அவர்களின் விண்ணப் பத்தை ஆராய்ந்த நீதிவான் அனைவரையும் பிணை யில் செல்ல அனுமதித்தார். (ஐ)

செய்திகள்




# அமைதியின் உருவம் குரூரமாக மாறியது ஏன்...?

## பிரான்ஸ் ஈழத் தமிழர் படுகொலை நடந்தது என்ன?

பாரிஸிலிருந்து
குமாரதாஸன்

பாரிஸின் புறநகரான நுவாசி - லூ- செக்கில் (Noisy-le-Sec) நிகழ்ந்த உள் குடும்ப உயிரிழப்புகள் அந்தப் பகுதியில் மட்டுமன்றி பிரான்ஸ் முழுவதும் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பத்து வயதுக்குட்பட்ட நான்கு குழந்தைகள் கூட்டாகக் கொலையுண்ட சம்பவம் குறித்து நுவாசி- லூ- செக் நகரின் மேயர் ஒலிவியர் சறாபேரூஸ் (Olivier Sarrabeyrouse) அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டிருக்கிறார்.

'அமைதியான பின்னணி கொண்ட ஒரு குடும்பத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தை தன்னால் நம்ப முடியாதுள்ளது" என்று மேயர் தனது ருவிட்டரில் பதிவிட்டிருக்கிறார்.

அண்மையில், மேயராகப் பதவி ஏற்பதற்கு முன்னரான காலத்தில் அந்தச் சிறுவர்கள் சிலரது பாடசாலைத் தலைமை ஆசிரியராகத் தான் பணி புரிந்ததை மேயர் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள், குடும்பத்தவர்கள், அயலவர்களை ஆற்றுப்படுத்துவதற்காக மனநல உதவி மையம் ஒன்று (உநடடரடந ிளலஉாழடழபனைரந) உடனடியாகத் திறக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார்.

பொபினி (Bobigny) நீதி நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட புலன் விசாரணையாளர்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துகின்றனர். கொலைகளுக்கான மூல காரணம் என்ன என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை.

புலம் பெயர்ந்து வசிக்கும் தமிழரான இளம் குடும்பஸ்தர் ஒருவரே இந்தப் படுகொலைகளைப் புரிந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. தனது மனைவி, கைக்குழந்தை உட்பட இரு குழந்தைகள் மற்றும் அவரது மூத்த சகோதரியின் இரு குழந்தைகள் (5, 9வயது) ஆகிய ஐவரையுமே கத்தி மற்றும் சுத்தியல் என்பவற்றால் தாக்கிக் கொலை செய்துள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

18 மாதங்களேயான தனது கைக்குழந்தையைக் கொல்லும் அளவுக்கு பாதிக்கப்பட்ட மன நிலையில் அவர் இருந்திருக்கிறார்.

முதலில் தனது வீட்டுக்குள் வைத்து மனைவியையும் இரு குழந்தைகளையும் கொன்றுவிட்டு அருகே மற்றொரு வீட்டில் வசிக்கும் தனது சகோதரி குடும்பத்தினரை அங்கு வரவழைத்து அவர்களையும் தாக்கியுள்ளார். சகோதரியும் அவரது கணவரும் படுகாயமடைந்துள்ளனர். அவர்களது ஐந்து மற்றும் 9 வயதான இரு குழந்தைகள் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர். 13 ,15 வயதுகளையுடைய ஏனைய இரு வளர்ந்த பிள்ளைகள் ஒருவாறு தமது மாமனாரின் பிடியில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

அவ்வாறு காயத்துடன் தப்பியோடிய சிறுவர்களில் ஒருவனே அருகே அமைந்திருந்த மது அருந்தகம் ஒன்றுக்குள் சென்று தஞ்சமடைந்துள்ளான். தனது மாமனார் எல்லோரையும் தாக்கிக் கொல்கின்றார் என்ற தகவலை அச்சிறுவனே அங்கிருந்தோரிடம் முதலில் தெரியப்படுத்தி உள்ளான்.

அந்த மது அருந்தகத்தின் உரிமையாளரான மொஹமெட் ஹெமானி (Mohamed Hemani) என்பவர் ஊடகம் ஒன்றிடம் கூறுகையில்: -

> **முதலில் தனது வீட்டுக்குள் வைத்து மனைவியையும் இரு குழந்தைகளையும் கொன்றுவிட்டு அருகே மற்றொரு வீட்டில் வசிக்கும் தனது சகோதரி குடும்பத்தினரை அங்கு வரவழைத்து அவர்களையும் தாக்கியுள்ளார். சகோதரியும் அவரது கணவரும் படுகாயமடைந்துள்ளனர். அவர்களது ஐந்து மற்றும் 9 வயதான இரு குழந்தைகள் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர். 13 ,15 வயதுகளையுடைய ஏனைய இரு வளர்ந்த பிள்ளைகள் ஒருவாறு தமது மாமனாரின் பிடியில் இருந்து தப்பியோடியுள்ளனர்.**

"13 வயதான சிறுவன் பதற்றத்துடன் ஓடி வருகிறான், தலையில் இரத்தம் வழிகிறது. மாமா என்னை சுத்தியலால் தாக்குகின்றார் என்று அவன் கதறுகிறான்"

"அவனுக்குப் பின்னால் யாரும் வரவில்லை. நான் அவனைப் பாதுகாத்துக் கொண்டு பொலிஸாருக்கும் அவசர சேவையினருக்கும் அழைப்பு விடுத்தேன்"

புற்றி நுவாசி (Petit-Noisy) என்னும் பகுதியில் இயங்கும் அந்த அருந்தக உரிமையாளர் இப்படி விவரிக்கிறார்.

சம்பவங்களை நேரில் கண்டு அதிர்ச்சி அடைந்த வேறு சிலரும் இவ்வாறு தமது அனுபவங்களை ஊடகங்களிடம் தெரிவித்திருக்கின்றனர்.

கொலைகளைப் புரிந்த இளம் குடும்பஸ்தர் மிகவும் அமைதியானவர் என்று அயலவர்கள் கூறுகின்றனர். இப்படிக் கோரமாகக் கொலைகளைப் புரிந்தாரா என்பதை அவர்கள் நம்ப மறுக்கின்றனர். அவர்களுக்குள் குடும்பப் பிணக்குகள் இருக்கின்றன என்று தாங்கள் அறியவில்லை என்கின்றனர்.

உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த அவர் கடந்த சில நாட்களாக தீவிர மன அழுத்தத்துக்கு ஆளானவர் போன்று காணப்பட்டார் என்ற ஒரு தகவலும் அயலவர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

கொலைகளைப் புரிந்த அவர் தன்னைத் தானே கொல்லும் நோக்குடன் உடலில் பல இடங்களில் வெட்டிக் காயப்படுத்தியிருக்கிறார்.

அவசர சேவையினர் அவரை மீட்டபோது அவர் சுய நினைவிழந்து கோமா நிலையில் கிடந்துள்ளார். தற்சமயம் பாரிஸின் புறநகர் பகுதி மருத்துவமனை ஒன்றில் அவருக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

புலம் பெயர் தமிழ் சூழலில் உள்குடும்பங்களில் நிகழும் இத்தகைய கொலைகள் அதிகரித்து வருகின்றன. பெற்றவர்களே தமது சிறு பிஞ்சுகளை கோரமாகக் கொல்லும் அளவுக்கு நிலைமை செல்கிறது.

ஏற்கனவே நெருக்கடிகள், மன அழுத்தங்கள் மிகுந்த புலம்பெயர் வாழ்வு மேலும் சிதைவடைந்து செல்கின்றதா?

கொரோனா வைரஸ் முடக்கங்களின் பின்னர் நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் பெரும் நெருக்கடிகளும் அவை உருவாக்கும் மன அழுத்தங்களும் சிலரை இது போன்ற குரூரமான முடிவுகளை நோக்கித் தள்ளிவிடக் காரணமாகின்றனவா?

லண்டன் உட்பட தமிழர்கள் மத்தியில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த இதுபோன்ற உள் குடும்பப் படுகொலைச் சம்பவங்களுக்கான காரணிகளைக் கவனத்தில் எடுக்காமலேயே அவற்றை கடந்த போய்க் கொண்டிருக்கின்றோமா?

"மிருக வெறி" என்று மேலெழுந்தவாரியாகக் கருத்துச் சொல்லிவிட்டுப் போகின்ற ஒரு விவகாரமா இது? (மிருகங்கள் தம் குட்டிகளைக் கொல்வதில்லை)

குற்றம் கண்டுபிடிக்கும் சட்ட ரீதியான விசாரணைகளுக்குப் புறம்பாகச் சிலர் சமூக நோக்கு சார்ந்த இத்தகைய முக்கிய கேள்விகளையும் முன்வைக்கின்றனர்.

குடும்பக் கட்டமைப்பில் நிகழும் இத்தகைய உட்சிதைவுகள் சமூக நோக்குடையவர்களால் விவாதிக்கப்படவும் ஆராயப்படவும் வேண்டிய முக்கிய விவகாரமாக மாறியுள்ளன. ■

செய்திகள்

# கொரோனாவை ஒழிக்க ஒத்துழைப்பு தாருங்கள்

## சுகாதார அமைச்சர் கோரிக்கை



கொழும்பு,ஒக்.05

**கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஒத்துழைப்பு தாருங்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம், கொரோனாவை ஒழிக்க அதிக முக்கியத்துவம் வழங்கியது. இதன் மூலம், ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக கொரோனா ஒழிப்பு விடயத்தில் இலங்கை விளங்கியது. நாமும், கொரோனாத் தொற்றிலிருந்து விரைவாக மீண்டோம்.

இதேவேளை இன்று, ஒருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். எனவே, ஏனையோருக்குப் பரவுவதைத் தடுக்க, பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், மக்கள் அனைவரும் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதுடன், அதிக சனநெருக்கடி மிக்க பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

மேலும், கடந்த காலங்கள் போன்று மீண்டும் ஒத்துழைப்பு தாருங்கள்- என்றார். (எ)

# மாடுகளை வெட்டத் தடை உடன் அமுலாக வேண்டும்

## ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து



கொழும்பு,ஒக்.05

நாட்டின் மீது அக்கறை கொண்ட தலைவர் ஒருவர் செய்ய வேண்டியது அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசப்படுத்திக் கொள்வதல்ல. நாட்டு மக்களுக்கான நலனைப் பெற்றுக் கொடுப்பதே என்று விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதை தடை செய்வது தொடர்பில், அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். அதனை நிறைவேற்றும் வரை மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும் தேரர் கோரிக்கை விடுத்தார்.

நாரஹென்பிட்டி - ஸ்ரீ சங்கா விகாரை மண்டபத்தில் நேற்று, விலங்குகள் மற்றும் இயற்கைக்கான நீதி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'உயிரினங்களை வதைப்பதை அனைத்து சமயங்களும் பாவச் செயல் என்றே கூறுகின்றன. இறைச்சிக்காக மாடுகளை வெட்டுதல் தடை செய்யப்பட வேண்டும் என்பது தொடர்ந்து பேசப்பட்டு வரும் விடயமாகும். அதற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது தடை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் எந்த இன, மத பேதமுமின்றி ஆதரித்திருந்தனர். ஆனால், இந்தத் தீர்மானமானது உடனே நிறைவேற்றப்படாமல் ஒரு மாதத்திற்கு பிற்போடப்பட்டது. இதற்கு, பிரதான காரணம் இவ்வாறு இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் வர்த்தகர்களால் முன்னெடுக்கப்பட்ட அழுத்தமாகும்.

இந்தத் தீர்மானத்திற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதனால், மேலும் காலங்கடத்தாமல் தடை உத்தரவை உடனே அமுலுக்கு கொண்டுவர வேண்டும்.

சிலர் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது பாவச் செயல் என்றால், ஏனைய விலங்குகளை உணவுக்காக பயன்படுத்துவது பாவச் செயல் இல்லையா? என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். அதுவும் பாவச் செயல்தான். ஆனால், முதலில் நாம் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதை தடுத்துவிட்டு, அதன்பிறகு ஏனைய விலங்குகளை வெட்டுவதையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். முதலில் இந்தத் தீர்மானமானது ஒரு இனத்தையோ, மதத்தையோ இலக்கு வைத்து எடுக்கப்பட்டதல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும் - என்றார். (எ)



# வவுனியாவில் துப்பாக்கிகளுடன் ஒருவர் சிக்கினார்

வவுனியா,ஒக்.05

வவுனியா, பன்றிகெய்த குளம் பகுதியில், விலங்குகளை வேட்டையாட பயன்படுத்தப்படும் சட்டவிரோத துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பன்றி கெய்தகுளத்தில், வீடொன்றில் சட்ட விரோத துப்பாக்கிகளை (இடியன்துவக்கு) மறைத்து வைத்திருப்பது தொடர்பில் ஓமந்தை பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பில், மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பொதுமக்கள் தினம் இவ்வாரம் இல்லை

கொழும்பு,ஒக்.05

அரச அலுவலகங்களில் திங்கட்கிழமை இடம்பெறும் பொதுமக்கள் தினம் இவ்வாரம் இடம்பெறாது என அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரட்ணசிறி தெரிவித்தார்.



இது தொடர்பில், அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ வெளியிட்ட அறிக்கையில்,

அடுத்த வாரம் நடைபெறவுள்ள பொதுமக்கள் தினம் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வீதி ஒழுங்கை மீறுவோருக்கு எதிராக இன்று முதல் கடும் சட்ட நடவடிக்கை

## விமானப்படையினரும் கண்காணிப்பு

கொழும்பு,ஒக்.05

வீதி ஒழுங்கு நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக இன்று முதல் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுப் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் இந்திக ஹபுகொட இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, போக்குவரத்து விதிகளை மீறுவோரைக் கண்காணிக்க விமானப்படையினரின் உதவி பெறப்படும் என அவர் கூறினார்.

அதன்படி, போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோடு அபராதமும் விதிக்கப்படும் - என்றார். (எ)

# ரத்மலனா ரோஹாவின் நெருங்கிய சகாக்கள் கைது

## வெடிமருந்துகளும் மீட்பு

கொழும்பு,ஒக்.05

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 'ரத்மலானா ரோஹா" என்பவரின் நெருங்கிய நண்பர்கள் நால்வரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் பிற்பகல் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரத்மலனாவில் உள்ள கொனகோவில பகுதியில் புதைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளும் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கிருந்து ரி-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 255 ரவைகளும், மில்லி மீற்றர் 9 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 4 ரவைகளும், 8 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 3 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 'ரத்மலனா ரோஹா" என்பவருடன் நுவரெலியா பகுதியில் இடம்பெற்ற ஒன்று கூடல் நிகழ்வில் பங்கேற்றுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக, விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் கல்கிஸ்ஸபொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# தேங்காய்களை பதுக்கும் வியாபாரிகளை அடையாளம் காண விசேட சுற்றிவளைப்பு

கொழும்பு,ஒக்.05

தேங்காய்களை பதுக்கி யும், தேங்காய்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறியும் விற்பனை செய்யும் வியாபாரிகளை அடையாளம் காண நாடு தழுவிய சுற்றிவளைப்புக்களை நடத்தி வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் கட்டுப்பாட்டு விலையை மீறிக் கூடுதலான விலைக்கு தேங்காய்களை விற்ற பல வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் தேங்காயின் சுற்றளவின் அடிப்படையில் தேங்காய்களுக்கான கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும், இவ்வாறு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது முதல் சந்தையில் தேங்காய் பற்றாக்குறை நிலவுகிறது என நுகர்வோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

செய்திகள்

## பூசகர் அடித்துப் படுகொலை சைவ மகா சபை கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.05

புங்குடுதீவு - பாணாவிடை சிவன் கோவில் பூசகர் ரூபன் சர்மாவின் படுகொலைச் சம்ப வத்தை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாகக் கண் டித்துள்ளது.

கொலையாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங் குவதன் மூலம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவேண் டும் எனவும் சம்பந்தப்பட்ட தரப் புக்களை சைவ மகா சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இப்படுகொலை தொடர் பில், சைவ மகா சபை வெளி யிட்ட கண்டன அறிக்கையில்:-

தாய் மதமாம் சைவ சமயத் தில் அளவுகடந்த பற்றுறுதி கொண்ட ரூபன் சர்மா, ஜீவ காருண்யத்திற்காக அதிகம் போராடியவர். சமூக விரோதச் செயல்களுக்கு எதிராகத் துணிந்து குரல்கொடுத்தவர். இந்நிலையிலேயே அவர் படு கொலை செய்யப்பட்டிருக் கின்றார்.

இந்தக் கொலையின் பின் னணி ஆராயப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இதன் மூலம் சட் டம், ஒழுங்கு நிலைநாட்டப் படவேண்டும்.

மனிதத்துவத்திற்கும் ஜீவ காருண்யத்திற்காக, போராடி உயிர்துறந்த போற்றுதல்குரிய ரூபன் சர்மாவிற்கு ஆத்மார்த்த அஞ்சலிகள். அவரது ஆன்மா இறை சிவனின் பாதார விந்தங் களில் சாந்திபெறும். அவரது நல்ல எண்ணங்கள் இவ்வுலகில் நிலைத்து நிற்கும் - எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ)

# அலட்சியம் வேண்டாம் ஆபத்தை உணருங்கள்

### மக்களை எச்சரிக்கிறார் சவேந்திர சில்வா



**கொழும்பு,ஒக்.05**

**நாட்டில், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்திய மையால், மீண்டும் தொற்று ஏற்படாது என்று அர்த்தப் படாது. எனவே, மக்கள் அலட்சியப்படுத்தாது, ஆபத்தை உணர்ந்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.**

நாட்டில், கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பில், அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில், நாம் மிகவும் வெற்றிகரமாக கொரோனா வைரஸ் தொற்றை இலங்கையில் கட்டுப்படுத்தி யுள்ளோம். எனினும், கொரோ னாத் தொற்று அபாயம் மீண்டும் ஏற்படாது என்று அர்த் தப்படாது. நாட்டின், அனைத் துப் பிரஜைகளும் தொடர்ந்து, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். இது அத் தியாவசியமாகவே கருதப்படு கின்றது- என்றார். (எ)

## உலக நடுவர் மன்றத்தில் இலங்கையை நிறுத்தினால் தமிழர்களுக்கு நீதி கிட்டும்

### ஜெனிவாவில் வலியுறுத்து

ஜெனிவா,ஒக்.05

தமிழர்களுக்கு உரிய முறை யில் நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின், உலக நடுவர் மன்றத்தில் இலங்கையை நிறுத்துவதுதான் சிறந்த வழியென ஜெனிவா கூட்டத் தொடரில் வலியுறுத்தப்பட் டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத் தொடர் கடந்த செப்ரெம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகியது.

இந்தக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை நடைபெறயிருக் கின்றது.

மூன்றாவது வாரத்தில் ஐ. நா.மனித உரிமைகள் சபையின் பிரதான அவையில் இடம் பெற்ற பிரிவு 5 - மனித உரி மைகளின் கூறுகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பான பொது விவாதத்தில் தமிழ் ஒலி என்ற அமைப்பின் சார்பாக உரையாற்றிய கஜீவன் ஜயாத் துரை இவ்வாறு குறிப்பிட்டார்.

'மனித உரிமை உயர் ஆணையர் 31:1 தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னேற் றமில்லை என்று தனது அறிக் கையில் குறிப்பிட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக் குப்பொறுப்புக்கூறல், நீதி, உண்மை ஆகியவற்றை தேடுவதில் இலங்கை அரசு எவ்விதச் செயல் பாடுகளையும் செய்யவில்லை.

இன அழிப்புக் குற்றம், மனிதகுலத்திற்கு எதிரான குற்றம், துன்புறுத்தல், போர்க் குற்றங்கள் போன்ற சில உலக குற்றங்களுக்கு மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்த உலகக் கட்டுப்பாட்டை உறுதி செய்யவேண்டும்.

மேலும், தங்களது உறவு களுக்காகப் போராடிய தாய்மார்கள், சிலர் இறந்தும் விட்டனர்.

தற்போது நடைபெறுகின்ற



தமிழின அழிப்பு பற்றிக் கலந்து ரையாடல் நடத்த, 40:1 தீர்மா னத்தின் முக்கிய குழுவையும் பிற உறுப்பினர்களையும், உடன்படிக்கை நாடுகளையும் அழைக்கின்றோம்.

2020ஆம் ஆண்டு முள்ளி வாய்க்கால் தமிழின அழிப்பு நினைவேந்தலையும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையும் திலீபன் நினை வேந்தலையும் நினைவுகூரத் தடை விதித்தனர்.

அத்துடன், தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் அரசு தவறி விட்டதால், காலம் தாழ்த்தா மல் உலக நடுவர் மன்றத்தில் நிறுத்தி, தமிழர்களுக்கு நீதி வழங்கச் செய்வதுதான் ஒரே வழியாகும்"-என்றார். (எ)

## கம்பஹாவில் நகர எல்லையை விட்டு வேறு நகருக்குப் பயணிக்கத் தடை!

கொழும்பு,ஒக்.05

கம்பஹாவின் சில பகுதிகளில் வசிப்போர் தமது நகர எல் லையை விட்டு வேறு நகருக் குப் பயணிக்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கம்பஹா, திவுலபிடிய, மினுவாங்கொட, வெம்முல்ல, மொரகஸ்முல்ல, வெவகெதர, ஹப்புவலான, ஹேன்பிடிகெதர மற்றும் கன்ஹின்முல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கே இந்தத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

திவுலப்பிட்டிய பிரதேசத் தைச் சேர்ந்த 39 வயதுப் பெண் ஒருவருக்கே இவ்வாறு கொரோ னாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

அதன்படி, நாட்டில் கொரோ னாத் தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை 3,395 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்தப் பெண் சுகவீனம் காரணமாக, கம்பஹா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சைப் பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், அவர் குண மாகி வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் போது மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோத னையில் அவருக்கு கொரோ னாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அதன்படி, கம்பஹா வைத்தி யசாலையில் பணிபுரியும் 15 பேரும் மற்றும் அந்தப் பெண் தொழில் புரியும் தனியார் நிறுவனத்தின் சுமார் 40 ஊழி யர்களும் சுய தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன் காரணமாக பொது மக்கள் மிகவும் அவதானத் துடன் சுகாதார வழிகாட்டல் களைப் பின்பற்றி செயற்படு மாறு சுகாதார அமைச்சு அறி வுறுத்தியுள்ளது. (எ)

# தனது அரசியல் சுயலாபத்திற்காக தாக்குதலை பயன்படுத்தியது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.05

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று, இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலை ராஜபக்‌ஷ அரசாங்கம், தனது அரசியல் சுயலாபத்திற்காகவே கடந்த காலங்களில் பயன் படுத்தியது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம்சாட்டினார்.

மேலும், இந்த நாடகத்திற்கு மக்கள் ஏமாற்றமடையக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண் டார்.

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'பொதுத் தேர்தல் காலத்தின் போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அதிகளவாக பேசப்பட்டது. இதுதொடர் பில், பல்வேறு நாடகங்களும் அன்று அரங்கேற்றப்பட்டன.

ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளை யாகச் செயற்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் வழங்கப்போகும் தண்டனை என்ன? எம்மைப் பொறுத்தவரை அவர்கள் அனைவருக்கும் மரண தண் டனை வழங்கவேண்டும்.

பொதுத் தேர்தல் காலத்தில், இந்த விவகாரத்தை அரசாங்கம் அரசியல் சுயலாபத்திற்காகத் தான் பயன்படுத்தியது. பாரா ளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரனை இந்த அரசாங்கம் கைது செய்தது.

ஆனால், இன்று அவருக்கு எதிராக எந்தவொரு சாட்சியும் இல்லாத காரணத்தால் அவரை விடுதலை செய்தது.

அப்படியானால், பொதுத்தேர் தல் காலத்தின்போது கூறிய கதை களுக்கு என்ன ஆனது? இவை அனைத்தும் மக்களை முட்டா ளாக்க அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடாகவே நாம் கருது கின்றோம்.

இதிலிருந்தே அரசாங்கம் அரசியல் இலாபத்திற்காகத் தான் இந்த விடயத்தைப் பயன்படுத்தியது என்பது உறுதியாகியுள்ளது.

இன்று ஈஸ்டர் குண்டுத்தாக்



குதல் குறித்து கவனம் செலுத் தாமல், ஜனநாயகத்தை அழிக் கும் 20 ஐ கொண்டுவரவே இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கிறது.

இது அரசியல் கண்ணாம்பூச்சி நாடகமாகும். இதற்கு மக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏமாந்துவிடக்கூடாது"-என் றார். (எ)

## குடுவுடன் ஒருவர் கைது

கொழும்பு,

கலஹா பொலிஸ் பிரிவிற் குட்பட்ட நில்லம்பை பகுதி யில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து ஒரு கிராம் 380 மில்லி கிராம் போதைப் பொருள் (குடு) கைப்பற்றப்பட் டுள்ளது.

கலஹா பொலிஸ் புலனாய் வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டது.

இதன்போது, நீண்ட கால மாக மிகவும் சூட்சுமமான முறை யில் போதைப்பொருள் விற் பனை செய்து வந்த நபர் மடக் கிப்பிடிக்கப்பட்டார். அவரி டம் பல கோணங்களில் விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

உலகச் செய்திகள்

## ஜனாதிபதி ட்ரம்ப் சிகிச்சை பெறும் மருந்துவமனை அருகே மர்மப் பை!

வாஷிங்டன், ஒக். 05

ஜனாதிபதி ட்ரம்ப் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனை அருகே கிடந்த மர்மப் பையால் அமெரிக்காவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமான வகையில் கிடந்த இந்தப் பையை வெடிகுண்டு நிபுணர்கள் அப்புறப்படுத்தினர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் இருவருக்கும், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

கடுமையான காய்ச்சல், மூச்சு விடுவதில் ஏற்பட்ட சிக்கலால் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் இருந்து இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு, அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ட்ரம்ப் சிகிச்சைக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறார் எனவும், ஆனாலும், அடுத்த 48 மணி நேரம் மிகவும் முக்கியமானது என்று நேற்றுக் காலை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே, ட்ரம்ப் சிகிச்சை பெற்று வரும் இராணுவ மருத்துவமனை வளாகத்திற்கு அருகே ஒரு பை கிடந்தது. சந்தேகப்படும்படியான அந்தப் பையை யாரும் நெருங்கவில்லை. மருத்துவமனைக்கு வரும் வீதிகளை பொலிஸார் உடனடியாக மூடினர். மர்மப் பை குறித்து வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களுக்கு தகவல் வழங்கப்பட்டது.

வெடிகுண்டு நிபுணர்கள் வந்து அந்தப் பையை சோதனை செய்தனர். பின்னர் அந்தப் பையை அங்கிருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு கொண்டு சென்றனர். இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பையில் என்ன இருந்தது என்பது பற்றிய தகவல் வெளியிடப்படவில்லை. (எ)

## கம்யூனிஸ்ட்களுக்கு அமெரிக்கா கதவடைப்பு!

நியூயோர்க், ஒக். 05

எந்த நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அமெரிக்காவில் குடியேற முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமெரிக்காவின் குடியேற்ற சேவைகள் அமைப்பு அறிவித்துள்ளது.



அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், புதிய கொள்கை அறிவிப்பை அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு வெளியிட்டுள்ளது.

சீனாவுக்கு எதிராகக் கடுமையாக ட்ரம்ப் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு எதிராக இத்தகைய அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தடுப்பு மருந்து ஜனவரியில் தயாராகிவிடும்!

### ஒக்ஸ்போர்ட் பல்கலை நம்பிக்கை

லண்டன், ஒக். 05

கொரோனா தடுப்பு மருந்தை பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இன்னமும் மூன்று மாதங்களில் சந்தைக்கு கொணர்ந்து விடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் சோதனை முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

ரஷ்யாவுக்கான தடுப்பு மருந்தை கண்டுபிடித்து விட்டதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார். இந்நிலையில், சீனா தனது தடுப்பு மருந்து மூன்றாம் கட்டப் பரிசோதனைக்கு தயாராகி விட்டது என்று அறிவித்துள்ளது.

இந்நிலையில், அதிகம் எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தடுப்பு மருந்து வரும் 2021 ஜனவரியில் சந்தைக்கு வந்து விடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலகளவில் பேசப்படும் இந்த மருந்துக்கு 'ஒக்ஸ்போர்ட் வக்ஸின்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

# கலிபோர்னியா காட்டுத் தீ: 40 இலட்சம் ஏக்கர் நாசம்!

## 31 பேர் பலி: 80,000 பேர் வெளியேற்றம்!!

சன்பிரான்சிஸ்கோ, ஒக். 05



கலிபோர்னியாவில் பரவும் காட்டுத் தீயால் சுமார் 40 இலட்சம் ஏக்கர் காடுகள் சாம்பராகின. இது வரலாறு காணாத தீ என்று கூறப்படுகின்றது. இந்தத் தீயால் இதுவரை 31 பேர் பலியாகினர். தீ பரவும் பகுதிகளில் இருந்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் கடந்த ஒகஸ்ட் 15 ஆம் திகதி தொடக்கம் காட்டுத்தீ பரவி வருகின்றது. இந்தத் தீயை அணைக்க அமெரிக்கா கடும் முயற்சிகளை எடுத்து வருகின்றபோதிலும் அது பயனளிக்கவில்லை.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை மணிக்கு 48 கி.மீ. வேகத்தில் காற்று வீச ஆரம்பித்தது. இதனால் தீயின் பரவுகை வேகம் எடுக்க ஆரம்பித்தது. இந்தத் தீயால் 28 ஆயிரம் வீடுகள், கட்டடங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன.

மேலும், காற்றின் அதிகரிப்பு தீயணைப்புப் பணியை வெகுவாகப் பாதித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, காட்டுத் தீயால் வெப்ப அளவு கடுமையாக அதிகரித்துள்ளது. சன்பிரான்சிஸ்கோ முழுவதும் அடர்த்தியான புகை மண்டலம் சூழ்ந்துள்ளது.

கலிபோர்னியாவில் தற்போது 25 பெரிய காட்டுத் தீக்கள் உயிர்ப்புடன் உள்ளன. 17 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். எனினும் இந்தக் காட்டுத் தீயால் 40 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் இருந்தவை அனைத்தும் எரிந்து சாம்பராகி விட்டன.

இதுவரை தீ பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 80 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். 600 இற்கும் மேற்பட்ட கட்டடங்களும், 200 இற்கும் மேற்பட்ட வீடுகளும் தீக்கு இரையாகியுள்ளன.

இதனிடையே, நிலக்கரி, கச்சா எண்ணெய், எரிவாயுவால் ஏற்படும் பருவ நிலை மாற்றத்தால் பெரும் காட்டுத் தீ உருவாகும் என்று ஆய்வுகள் ஏற்கனவே எச்சரித்தன. வானிலை மாற்றத்தால் கலிபோர்னியா வறண்டு போகும் என்றும் விஞ்ஞானிகள் ஏற்கனவே எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா தடுப்பூசியை ஏற்க ஆஸ்திரியர்கள் தயாரில்லையாம்!

வியன்னா, ஒக். 05

கொரோனா தடுப்பூசிக்கு எதிராக ஆஸ்திரிய மக்கள் உள்ளனர் என்று தனியார் நிறுவன ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் தடுப்பூசியை கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் தீவிரம் காட்டி வருகின்றன. உலக சுகாதார அமைப்பின் தகவலின்படி இதுவரை 192 தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 41 தடுப்பூசிகள் மருத்துவ பரிசோதனையில் உள்ளன.

இந்த நிலையில் ஆஸ்திரியாவில், ஒருவேளை கொரோனா தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்தால் அந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள எத்தனை பேர் தயாராக உள்ளனர் என்பது குறித்து தனியார் நிறுவனம் ஆய்வு ஒன்றை நடத்தியது.

இந்த ஆய்வில், 3 இல் 2 பங்கு ஆஸ்திரிய மக்கள் கொரோனா தடுப்பூசியை எடுத்து கொள்ளப் போவதில்லை என தெரிவித்துள்ளனர். ஆய்வில் பங்கேற்றவர்களில் 16 சதவீதம் பேர் கொரோனா தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள தயாராக இருப்பதாகவும், 16 சதவீதம் பேர் இது பற்றிய முடிவை இன்னும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.





## அசர்பைஜான் – ஆர்மீனியா மோதல்: உயிரிழப்பு பல ஆயிரமாக உயர்ந்தது

### -சமதானப் பேச்சு முயற்சியும் புறக்கணிப்பு -

யேரெவன், ஒக். 05

அசர்பைஜான் - ஆர்மீனியா நாடுகளிடையேயான மோதலில் இதுவரை பல ஆயிரம் இராணுவத்தினர் பலியாகினர் என்று தெரிய வருகின்றது.

அசர்பைஜான் - ஆர்மீனியா நாடுகளிடையே கடந்த 27 ஆம் திகதி நாகோர்னோ - கராபக் பிராந்தியத்தில் போர் தொடங்கியது. ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் இந்தப் போர் மேலும் நீடிக்கிறது.

இரு நாடுகளிடையேயும் போரை நிறுத்தி சமாதானப் பேச்சை ஏற்படுத்த அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் முயன்றபோதும், இரு நாடுகளும் மறுத்து விட்டன. அவை தொடர்ந்தும் மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இதனிடையே, நாகோர்னோ-காராபாக் பிராந்தியத்தில் சுயாட்சி நடத்தும் அர்ட்சாக் குடியரசு, இந்த மோதலில் அசர்பைஜானின் மூவாயிரம் இராணுவத்தினர் பலியாகினர் என்று தெரிவித்துள்ளது. மேலும், இறந்தவர்களின் உடலங்கள் அகற்றப்படாமல் களத்திலேயே கிடக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இது குறித்து அசர்பைஜான் இராணுவம் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அதேசமயம் நாகோர்னோ - கராபக் பிராந்தியத்தில் பல பகுதிகளைக் கைப்பற்றி தாம் கைப்பற்றிவிட்டோம் என்று அசர்பைஜான் அறிவித்துள்ளது.

செய்திகள்

# மாநகர முதல்வர்கள் மாநாடு யாழில்







யாழ்ப்பாணம்,ஒக்.05

இலங்கையிலுள்ள மாநகர சபைகளின் முதல்வர்கள் பங்குபற்றும் வருடாந்த மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்ற ஒன்றியங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி ஹேமந்தி குணசேகரவின் நெறிப்படுத்தலில், யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இந்த மாநாடு இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் இலங்கையிலுள்ள 24 மாநகர சபைகளின் முதல்வர்களில் 18 மாநகர சபை முதல்வர்கள் கலந்து கொண்ட போதும், 6 மாநகர சபைகளின் முதல்வர்கள் பங்குபற்றவில்லை.

கொழும்பு, அக்கரைப்பற்று, நுவரெலியா, கல்முனை,பண்டாரவளை மற்றும் தெஹிவளை - கல்கிஸை ஆகிய மாநகர சபைகளின் முதல்வர்களே இம்மாநாட்டில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## மத்திய கிழக்கில் இலங்கையர்கள் 63 பேர் மரணம்

கொழும்பு,ஒக்.05

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்கள் 63 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

இதில் நூற்றுக்கு 50 வீதமான மரணங்கள் சவூதி அரேபியாவில் பதிவாகியுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதன் பிரதி முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

வேலை நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 20இற்கு எதிராக இன்று கறுப்புக்கொடி போராட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு அனைத்து மக்களுக்கும் அழைப்பு



கொழும்பு,ஒக்.05

**அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக இன்று திங்கட்கிழமை கறுப்புக்கொடி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப்போராட்டத்திற்கு எதிர்க்கட்சிகளில் பெரும்பாலானவை ஆதரவு வெளியிட்டுள்ளன.

இன்று முழுவதும் அனைத்துப் பொதுமக்களும் கறுப்புக்கொடிகளைக் கட்டி 20ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்புக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் முக்கிய இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கறுப்புக்கொடிகளைக் காண்பித்து எதிர்ப்புக்களை வெளியிடவுள்ளனர்.

இதேவேளை, இன்று மாலை 4 மணியளவில் கொழும்பு, புகையிரத நிலையத்தில் 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் துண்டுப்பிரசுர நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விடயங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க உறுதிப்படுத்தியதோடு, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் அனைத்துத் தரப்பினரையும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்குமாறு கோரினார்.

அத்துடன், பொதுமக்கள் தமது நிலைப்பாடுகளைப் பகிரங்கமாக தெரிவிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

## கொரோனா அச்சம்: கட்டுநாயக்கவில் கட்டுப்பாடுகள்

கம்பஹா மாவட்டத்தின் பல பொலிஸ் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவுகளால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமும், விமான நிலைய நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய சில கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் மற்றும் வருகை தரும் முனையங்களில் அமைந்துள்ள வணிக நிலையங்களுக்கான வெளியாட்கள் நுழைவுக்கு நண்பகல் 12.00 மணி முதல் நிறுத்தப்பட்டுள்ளது என விமான நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய நிர்வாகம், விமான நிலையத்தின் வருகை முனையம் மற்றும் வருகை முனையத்தின் நுழைவாயிலை மூடுவதற்கும், பொது மக்கள் பார்வையாளர் அரங்கம் மற்றும் ஓய்வறைகள் என்பனவற்றை மூடுவது தொடர்பிலும் இன்று முக்கிய தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (எ)

# இலத்திரனியல் கழிவுகள் தபாலகங்களில் சேகரிப்பு

### வேலைத் திட்டம் இன்று ஆரம்பம்

கொழும்பு,ஒக்.05

மின்னணு மற்றும் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிப்பதற்கான தேசிய வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் இன்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாடு முழுவதுமுள்ள 653 தபாலகங்களில் இவ்வாறு மின்னணு மற்றும் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

அஞ்சல் வாரத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த தேசிய வேலைத்திட்டம் இன்று காலை 8 மணி முதல் 11 மணி வரை சகல தபாலகங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே, மின்னணு மற்றும் இலத்திரனியல் கழிவுகள் இருந்தால் அவற்றை அருகிலுள்ள தபாலகங்களில் கையளிக்க முடியும்-என்றார். (எ)

## ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப மாத்திரமே பயணிக்க முடியும்

### பேருந்து பயணிகளுக்கு விசேட அறிவிப்பு

கொழும்பு,ஒக்.05



நாட்டில், இன்று ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால், அரசாங்கம் உடன் அமுலாகும் வகையில் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அனைத்து அரச, தனியார் பேருந்துகளைப் பயன்படுத்தும் பயணிகள், பேருந்து ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாத்திரமே பயணிக்க முடியும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ளது. (எ)


செய்திகள்

# பீதியடைய வேண்டாம்!

## அமைச்சர் நாமல் வலியுறுத்து

கொழும்பு,ஒக்.05

**மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய பகுதியில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் ஒவ்வொரு இலங்கையர்களும், கொரோனாத் தொற்று நோய்த் தீவிரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**


Namal Rajapaksa @RajapaksaNamal · Oct 3
As police imposes curfew in Minuwangoda and Divulapitiya, every Srilankan must understand the severity of the COVID-19 pandemic and strictly practice the safety measures. Please do not panic and follow the health guideline.
#WearAMask #WashYourHands #StayHome
5 28 175

இது தொடர்பில், தனது டுவிட்டரில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், தயவு செய்து பீதியடைய வேண்டாம், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுங்கள் என்று அவர் பொது மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் அமைந்துள்ள பிரபல ஆடை உற்பத்தி நிலையமொன்றின் பெண் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

39 வயது பெண் காய்ச்சலுடன் கம்பஹா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வெளியேற்றப்படவிருந்தார்.

எனினும், நேற்றுக் காலை வெளியான அவரது பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் உடனடியாக அவர் கொழும்பு தேசிய தோற்று நோயியில் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அவர் தொழில்புரிந்த தொழிற்சாலையும் மூடப்பட்டு, கிருமி நீக்க நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

அது மாத்திரமன்றி தொழிற்சாலையில் அவருடன் தொடர்புகளைப் பேணிய 40 பேரை அவர்களது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இதேவேளை, மினுவாங்கொடை மற்றும் திவுலபிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும், மேலதிக அறிவிப்பு வரும் வரையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

# கல்வி நிறுவனங்களுக்கு இன்று முதல் விடுமுறை

கொழும்பு,ஒக்.05

களனிப் பல்கலைக்கழகம் மற்றும் விக்கிரமராச்சி ஆயுர் வேத கல்வி நிறுவனங்களுக்கு ஒரு வாரத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீர்கொழும்பு மஹர சிறையில் கைதிகளைப் பார்வையிடத் தடை



கொழும்பு,ஒக்.05

நீர்கொழும்பு மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு கைதிகளைப் பார்வையிடச் செல்வது மறுஅறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (எ)

# 20ஆவது திருத்தம் நன்மை பயக்கும்!

## மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துகிறார் மஸ்தான்



வவுனியா,ஒக்.05

20ஆவது திருத்தச் சட்டத்தை மக்களுக்கு நன்மை பயக்குமாறு செய்து தருவோம் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில், ஜனாதிபதியின் விசேட வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் மூலம் கற்குளம் படிவம் 1,2,3,4 ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதான வீதி புனரமைப்பிற்கு 78 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பப் பணிகளை உத்தியோகபூர்வமாக, நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

20ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பாக பல விமர்சனங்கள் வருகின்றன. அவ்வாறு வருகின்ற விமர்சனங்களை எல்லாம் ஒன்று திரட்டி இலங்கை மக்களுக்கு பிரயோசனமாக, அமையக் கூடிய ஒரு திருத்தமாகவே இது இருக்கும்.

மேலும், அரசமைப்பு திருத்தத்தைக் கோரி வாக்குக் கேட்ட 151 பேரை இன்று பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

எனவே, மக்களுக்கு பாதிப்பு இல்லாததும், மக்களுக்கான விரைவான அபிவிருத்திகள், மக்களுக்கு அரசியல் மட்டத்திலோ அல்லது அதிகாரிகள் மட்டத்திலோ ஏற்படுகின்ற பிரச்னைகளைத் தீர்க்கின்ற விதத்திலே நல்லதொரு அரசமைப்பு கிடைக்கும். இதுதொடர்பாக பலவற்றைப் பேசுவார்கள். எதிர்க்கட்சி என்றாலே எதிர்ப்பது தான் வேலையாகும். அவ்வாறான பேச்சைக் கேட்டு மக்கள் யோசிக்கவேண்டிய தேவையில்லை. 20ஆவது திருத்தத்தையும் மக்களுக்கு நன்மை பயக்குமாறு செய்து தருவோம்.

எல்லாத் தேர்தல்களிலும் இனவாதம் கக்கப்படும். ஆனால், இந்தத் தேர்தலில் மிகவும் வித்தியாசமாகவும் பலவிதமாகவும் இனவாதம் கக்கப்பட்டாலும் கூட அதற்கு வன்னியில் இடமில்லை என்றும் நாட்டிலும் இடமில்லை என்று பெரும்பான்மைச் சமூகமும் காட்டியுள்ளது.

அங்கு பௌத்த மதகுருமார்களைக் கொண்ட கட்சி போட்டியிட்டது. ஆனால், வெற்றி பெறவில்லை. மாறாக அனைத்து இடங்களிலும் கிடைத்த வாக்குகளைக் கொண்டு ஒரு ஆசனத்தைப் பெற்றார்கள். இவ்வாறு தான் பெரும்பான்மைச் சமூகம் அவ்வாறானவர்களை வைத்திருக்கின்றார்கள். இதைப் போன்றே இனவாதிகளுக்கு இடமில்லை என்பதை நீங்களும் தெளிவாகக் காட்டியிருக்கின்றீர்கள்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குகளை நீங்கள் வழங்குவதை விட ஆளுங்கட்சியில் வெற்றி பெறுபவருக்கு வாக்குப் போடுவதே உங்களுக்கு பலமாக இருப்பதோடு மக்கள் தங்களோடு இணைந்து விட்டனர் என்பதை ஜனாதிபதியும், பிரதமரும் பார்ப்பார்கள். இம்முறை நடைபெற்ற தேர்தலில் நீங்கள் எமக்களித்த ஆதரவானது அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. எதிர்காலத்தில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தவேண்டும் - என்றார். (எ)

# மன்னாரில் 110 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!



மன்னார்,ஒக்.05

மன்னார் - சிலாவத்துறை கடற்கரைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடி ரூபா பெறுமதியான 110 கிலோ கேரளக் கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தத் தொகை கேரளக் கஞ்சா போதைப்பொருள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா போதைப்பொருளை மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 2 பெண்களின் சடலங்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு,ஒக்.05

மிருகங்களுக்காக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இரு பெண்களின் சடலங்களை வனப்பகுதியில் மறைத்து வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெம்மாத்தகம - அம்பதெனிய பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் முன்னெடுத்த திடீர் சுற்றிவளைப்பிலேயே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்படுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் மின்சாரம் தாக்கி அந்தப் இரு பெண்களும் உயிரிழந்துள்ளனர். அம்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த (67 மற்றும் 36 வயது) இரு பெண்களே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த மின்வேலியானது சட்டவிரோதமான முறையில் மிருகங்களுக்காக அமைக்கப்பட்டது என்பதால் அந்தப் பெண்களின் மரணம் தொடர்பில் ஏற்படும் சட்ட பிரச்னைகளில் இருந்து தப்பிப்பதற்காகவே சந்தேக நபர் இரு சடலங்களையும் அந்தப் பகுதிக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் மறைத்து வைத்துள்ளார் என ஹெம்மாத்தகம பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சோதனை நடவடிக்கைகளின் போது சடலங்கள் இரண்டும் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

செய்திகள்

# 13ஐ வலுப்படுத்த வேண்டும் நீக்குவது முட்டாள்தனமானது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



கொழும்பு, ஒக். 05

**'பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் அடிப்படையில் சிறந்த கட்டமைப்பே. இந்த நிலையில் புதிய அரசமைப்பில் அதனை மேலும் வலுவானதாக மாற்றுவதற்குப் பதிலாக, முழுமையாக நீக்க வேண்டும் என்று கருதுவதோ, செயற்படுவதோ முட்டாள்தனமான நடவடிக்கையாகவே இருக்கும்", என்று அரசாங்கத்தின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. தனியே இந்த திருத்தச் சட்டத்தில் மட்டுமல்ல, உள்ளூராட்சி மன்றங்கள், மத்திய அரசாங்கம் என்று அனைத்து கட்டமைப்புக்களிலும் குறை, நிறைகள் இல்லாமல் இல்லை. சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தாலும் அதனை பிரயோக ரீதியாக முன்னெடுக்கப்படு கின்ற போதுதான் குறைபாடு களை அவதானிக்க முடியும். அவற்றை உரிய கலந்துரை யாடல்கள் மூலமாகத் தீர்த்துக்கொள்ள முடியும்.

"இதனைவிட 13ஆவது திருத்தச்சட்டம் அடிப்படையில் சிறந்த கட்டமைப்பாகவே உள்ளது. அவ்வாறானதொன்றை மேலும் வலுவானதாக மாற்றுவதற்கு பதிலாக, முழுமையாக நீக்க வேண்டும் என்று கருதுவதோ, செயற்படுவதோ முட்டாள்தனமானதொரு நடவடிக்கையாகவே இருக்கும்.", என்றும் கூறினார். (ஐ)

## பொலிஸார் மீது தாக்குதல் மூன்று சந்தேகநபர்கள் கைது

வடமராட்சி, ஒக். 05

பருத்தித்துறையில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கற்கோவளம் - புனித நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரு இளைஞர் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலை சிவில் உடையில் சென்ற பொலிஸார் இருவர் தடுக்க முயன்றபோது, அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த கே.ஜெயக்கொடி (வயது 52) என்பவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று விசாரணை நடத்திய பருத்தித்துறைப் பொலிஸார், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழு இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர்.

கைதானவர்களிடம் விசாரணை நடத்தி வரும் பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## மனைவி மீது துப்பாக்கிச் சூடு! தலைமறைவான கணவன் கைது

கொழும்பு, ஒக். 05

மனைவி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெறும் நிலையில் தலைமறைவான பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார் என்று நிக்கவெரட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நிக்கவெரட்டிய - வித்யார்த்த மாவத்தையைச் சேர்ந்த 44 வயது பெண்ணொருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

மனைவியை துப்பாக்கியால் சுட்டு விட்டு கணவன் தலைமறைவாகியிருந்த நிலையில் பொலிஸார் மேற்கொண்ட தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## புங்குடுதீவு பூசகர் படுகொலை; சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 05

புங்குடுதீவு பூசகர் கொலையுடன் தொடர்புடைய அவரின் உதவியாளர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான உத்தரவிட்டுள்ளார்.

பெண் சல்லாபத்தில் ஈடுபட்ட உதவியாளரை கண்டித்த பூசகரை, மூவர் சேர்ந்து அடித்துக் கொன்றனர். கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா இராசரூப சர்மா (வயது-32) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய ஊர்காவற்றுறை பொலிஸார் சந்தேக நபர்கள் மூவரையும் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்த நிலையில் அவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேகநபர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் உத்தரவிட்டார். (ஐ)

## 'திலீபனின் கனவை நனவாக்கவே அரசுடன் சேர்ந்து செயற்படுகிறேன்"

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் சொல்கிறார்

மட்டக்களப்பு, ஒக். 05

"திலீபனின் கனவை நனவாக்கவே இன்று நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறோம்", இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தபால் சேவைகள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு புளியந்தீவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:-

"தியாகி திலீபனின் அஹிம்சை வழிப் போராட்டத்தை நாங்கள் ஒருபோதும் கொச்சைப்படுத்தியதில்லை. இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ் மக்கள் ஏனைய சமூகத்துக்கு இணையாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும், யாருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது என்ற தியாகி திலீபனின் கனவை நனவாக்க நாங்கள் இன்று அரசாங்கத்தோடு இணைந்திருந்து வேலை செய்கிறோம்.

"சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக திலீபனின் விடயத்தில் நாங்கள் அமைதியாக இருந்தோம் என்பதைக் குற்றமாகக் கருதுகின்றனர். நாங்கள் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற கடையடைப்பு போராட்டத்தை குழப்பவில்லை. மறுப்பும் தெரிவிக்கவில்லை", என்றார். (ஐ)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் நடத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடல்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்: 03.10.2020 சனிக்கிழமை தொடக்கம் 9.10.2020 வெள்ளிக்கிழமை வரை**

**நேரம்: மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை**
**பயிற்சி வழங்குபவர் துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772**




கொரோனா பரவலின் எதிரொலி:

## யாழ். மாநகரில் சுகாதார நடைமுறைகள் இறுக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ். மாநகர எல்லைக்குள் கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மிக இறுக்கமாக நடைமுறைப் படுத்துமாறு பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டியவில் கொரோனா தொற்றுக்கு இலக்கான இருவர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகரில் பொலிஸார் வீதி சுற்றுக்காவல் நடவடிக்கைகளை நேற்று மாலை முதல் ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கையின் அளவுக்கு பயணிகள் ஏற்றப்படுகின்றரா என்றும், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் பின்பற்றுகின்றனரா என்றும் கண்காணித்தனர்.

மேலும், மேலும்பொது இடங்களில் சமூக இடைவெளியை பொதுமக்கள் பின்பற்றுமாறும் பொலிஸார் அறிவுறுத்தினர். (ஐ)

## ஆணின் சடலம் கரை ஒதுங்கியது



யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணத்தில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

தீவகத்தின் அல்லைப்பிட்டியில், வெண்புரவி நகர கடற்கரையிலேயே நேற்று நண்பகல் இந்த சடலம் கரை ஒதுங்கியது.

சடலம் யாருடையது என்று அடையாளம் காணப்படவில்லை. ஆனாலும், கடந்த 30 ஆம் திகதி இந்தியாவின் தமிழ்நாடு, இராமேஸ்வரம் பகுதியில் மீனவர் ஒருவர் கடலில் தவறி வீழ்ந்திருந்தார். இந்தச் சடலம் அவருடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்டுள்ள ஊர்காவற்றுறைப் பொலிஸார் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | நிகர ஓட்டம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 05 | 03 | 02 | + 1.214 | 06 |
| டில்லி கப்பிட்டல்ஸ் | 04 | 03 | 01 | + 0.588 | 06 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 04 | 03 | 01 | - 0.954 | 06 |
| கொல்கத்தா நைற்ரைடர்ஸ் | 04 | 02 | 01 | - 0.121 | 04 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 04 | 02 | 02 | - 0.317 | 04 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 05 | 02 | 02 | - 0.342 | 04 |
| ஹைதராபாத் சன்ரைசர்ஸ் | 05 | 02 | 02 | - 0.417 | 04 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 05 | 01 | 04 | + 0.178 | 02 |

DREAM11 IPL

இன்றைய ஆட்டம்

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர் டில்லி கப்பிட்டல்ஸ்

மைதானம் : டுபாய்

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

# போல்ட் அபார பந்துவீச்சு: மும்பை இந்தியன்ஸ் வெற்றி




சார்ஜா, ஒக். 05

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 34 ஓட்டங்கள் வித்தியா சத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சார்ஜாவில் நேற்று நடந்த 17ஆவது லீக் ஆட்டத்தில் ரோஹித் சர்மா தலை மையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், டேவிட் வோர்ணர் தலைமையிலான ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணியின் கப் டன் ரோஹித் சர்மா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 208 ஓட்டங் களை எடுத்தது.

அதிகபட்சமாக குயின்ரன் டி கொக் 67 ஓட்டங்களை எடுத்தார்.

ஹைதராபாத் அணி சார்பில் பந்து வீசிய சந்தீப் சர்மா மற்றும் சித்தார்த் கவுல் ஆகியோர் தலா 2 விக்கெட்டு களையும், ரஷித் கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன்மூலம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு 209 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இலக்கைத் துரத்திய ஹைதராபாத்துக்கு கப்டன் டேவிட் வோர்ணர் மற்றும் பரிஸ்டோ ஆகியோர் ஆரம்பம் கொடுத்தனர். இதில் பரிஸ்டோ 25 (15பந்து) ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரைத்தொடர்ந்து களமிறங்கிய மணீஷ் பாண்டே 30 (19) ஓட்டங்களும், கேன் வில்லியம்ஸன் 3 (5) ரன்னும், கார்க் 8 (7) ஓட்டங்களும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி அரைச்சதம் அடித்த வோர்ணர் 60 (44) ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இறுதியில் ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து, 174 ஓட்டங்களையே எடுத்தது. இதன்மூலம் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத் தில் 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றிபெற்றது.

மும்பை அணிக்காகப் பந்து வீசிய பும்ரா, போல்ட் மற்றும் பேட்டின்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை யும், பாண்ட்யா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக போல்ட் தெரிவானார். (ஐ)

# டோனி: 100 பிடிகள் சாதனை



டுபாய், ஒக். 05

சென்னையின் கப்டன் டோனி ஐ.பி.எல். கிரிக்கெட் அரங்கில் புதிய சாதனை படைத்தார். விக்கெட் காப்பாளாராக 100 பிடிகளை எடுத்ததே அந்த சாதனை.

நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் அணியின் கப்டன் கே.எல். ராகுலின் பிடியை எடுத்து ஆட்டமிழக்கச் செய்ததன் மூலமே அவர் இந்த சாதனையைப் படைத்தார்.

இதன் மூலம், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியின் கப்டன் தினேஷ் கார்த்திக்கின் சாதனைக்கு அடுத்த இடத்தில் டோனி இருக்கிறார். 193 போட்டிகளில் டோனி இந்த சாதனையைப் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பஞ்சாப்பை 10 விக்கெட்களால் வீழ்த்தியது சென்னை அணி




டுபாய், ஒக். 05

வற்சன், டு பிளசிஸின் அதிரடியான ஆட்டத்தால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 10 விக்கெட்களால் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயில் நடக்கும் ஐ.பி.எல். ரி- 20 ஆட்டத்தின் நேற்றைய 18ஆவது லீக் ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கே.எல்.ராகுல் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணியின் கப்டன் கே.எல். ராகுல் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி, அந்த அணிக்காக கப்டன் ராகுல் மற்றும் மயங்க் அகர்வால் இணை துடுப்பெடுத்தாடியது.

மயங்க் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கி சீரான ஆட்டத்தை வெளிப்படுத்திய மன்தீப்சிங் 27 ஓட்டங்களும், நிகோலஸ் பூரன் 33 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ராகுல், அரைச் சதத்தை பதிவு செய்து 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் மக்ஸ்வெல் 11 ஓட்டங்களும், சர்ப்ரஸ் கான் 14 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பஞ்சாப் அணி 4விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

சென்னை பந்து வீச்சில் ஷர்துல் தாகூர் 2 விக்கெட்டுகளையும், ஜடேஜா மற்றும் பியூஸ் சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

179 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய சென்னை அணிக்கு ஷேன் வற்சன், டு பிளசிஸ் தொடக்கம் கொடுத்தது.

நிலைத்து நின்று அதிரடி காட்டிய இந்த இணையால் ஓட்டம் அதிரடியாக உயர்ந்தது.

வற்சன் 83, பிளசிஸ் 87 ஓட்டங்களை எடுத்திருந்தனர். இதில் சாதனை அளவாக இரண்டு வீரர்களுமே 53 பந்துகளை சந்தித்திருந்தனர். இருவரும் 11 பௌண்டரிகளை விளாசினர்.

வற்சன் 3 சிக்சர்களும், பிளஸ்சிஸ் 1 சிக்சரும் விளாசியிருந்தனர். சென்னை அணி 17.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 181 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனா ஷேன் வற்சன் தெரிவானார்.

Prince Travels
Midnight Express




குறைந்த கட்டணத்தில்
யாழ். – கொழும்பு பஸ் சேவை 1000/=
1300/= இலிருந்து 1000/= ஆக குறைக்கப்பட்டுள்ளது.
மானிப்பாய் → சங்கானை → சித்தன்கேணி → பண்டத்தரிப்பு → விளான் → தெல்லிப்பழை → K.K.S. வீதி ஊடாக யாழ்ப்பாணம் → கொட்டாஞ்சேனை → பெற்றா → வெள்ளவத்தை → தெஹிவளை → சொய்சாபுர → மொறட்டுவ
ஆசனத்தை வீட்டில் இருந்தவாறே முற்பதிவு செய்யுங்கள்
0778859772 | 0778896771
www.princetravels.lk

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன் உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்



8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க

**பகல்**

1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி



5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து
6.30 மணி : நலம்தானா



**இரவு**

7.00 மணி : சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் யோகிபாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN VISION HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை

**பகல்**

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 - தமிழ்
6.00 மணி - தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 - கணிதம்
7.30 மணி - தரம் 09 - தமிழ்
8.15 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்

**இரவு**

6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**

12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.